## மன்ற நிகழ்விற்கான கூட்டப்பொருள்

**பொருள் எண்: 01**

வடலூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2026 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்: 02**

இந்நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு புதியதாக பேருந்து நிலையம் கட்டிமுடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்காணும் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் இடிக்கப்படுவதற்கு முன் உள்ள 22 கடைகளுக்கான மின் கட்டண தொகை ரூ.57,798/-ஐ நிலுவையில் உள்ளதாக இளமின் பொறியாளர் இயக்குதல்/ பராமரித்தலும், தமிழ்நாடு பகிர்மான கழகம் வடலூர் அவர்கள் கடிதத்தின் வாயிலாக (கடித ந.க.எண்.இமிபொ/இ&ப/நகராம் – வடலூர்/வ.2/கோ.நி.தொ/அ.எண்5/25நாள்.15.4.24) தெரிவித்துள்ளார்கள். தற்போது தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் - 2026 நடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் - 2023 பிரிவு 235-ன் கீழ் மேற்கண்ட தொகையை சம்பந்தபட்ட 4 கடைகளுக்கான வைப்புத்தொகையிலிருந்து ரூ.20,730/-ஐ ஈடுசெய்திவும் மீதம் உள்ள தொகை ரூ.37,068/-ஐ வருவாய் நிதியிலிருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.493/2026/இ1**

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நிர்வாக அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் - 2023 பிரிவு 235-ன் கீழ் பணி மேற்கொள்ள அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 03**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட சிதம்பரம் சாலை வெங்கடேஸ்வரா மரவாடி எதிரில், பண்ருட்டி சாலை பெட்ரோல் பங்க் எதிரில் மற்றும் பண்ருட்டி சாலை வெங்கடேஸ்வரா பேக்கரி எதிரில் ஆகிய பகுதிகளுக்கு புதியதாக மின்கம்பம் மற்றும் தெருவிளக்கு மின்பாதை அமைக்கும் பணிக்கு, உதவிமின் பொறியாளர், வடலூர் கிராமம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், க.எண். இமிபெ/ இ&ப/நகரம்-வடலூர்/கோ.கேட்புதொகை/ அ.எண்.191/26, நாள்.20.03.2026, கடிதத்தில் மேற்படி, பணிக்கான பதிவு கட்டணம் மற்றும் மின் இணைப்பு கட்டண தொகை ரூ.14,085/- செலுத்த வேண்டி வரப்பெற்ற பட்டியல் தொகை மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட சிதம்பரம் சாலை செவன்த்டே பள்ளி எதிரில், பண்ருட்டி சாலை அல்லா கோயில் எதிரில், பண்ருட்டி சாலை முருகன் கோயில் வடபுறம், பண்ருட்டி சாலை ஜெயப்பிரியா நகர் ஆகிய பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின்கம்பத்தில் புதியதாக தெருவிளக்கு மின்பாதை அமைக்கும் பணிக்கு மற்றும் பண்ருட்டி மெயின் சாலை ( பாபு ரோடோ டெக் முன்புறம்), பண்ருட்டி மெயின் சாலை (பூசாலிக்குப்பம் அய்யா பலகை அருகில்) சிதம்பரம் சாலை (சர்ச் எதிரில்) சிதம்பரம் சாலை (நடேசன் நகர் பிள்ளையார் கோயில் எதிரில்) பண்ருட்டி சாலை

பெட்ரோல் பங்க் வடபுறம் பண்ருட்டி சாலை நான்கு முனை சந்திப்பு (மேற்கு) பண்ருட்டி சாலை ஓடை நாயகி கோயில் எதிர்புறம் பண்ருட்டி சாலை ஸ்டேட் வங்கி எதிரில் ஆகிய பகுதிகளில் புதியதாக மின்கம்பம் மற்றும் தெருவிளக்கு மின்பாதை அமைக்கும் பணிக்கு, இளமின் பொறியாளர், வடலூர் நகரம், அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், க.எண். இமிபெ/இ&ப/நகரம்–வடலூர்/கோ.கேட்புதொகை/அ.எண்.191/26, நாள்.20.03.2026, கடிதத்தில் மேற்படி, பணிக்கான பதிவு கட்டணம் மற்றும் மின் இணைப்பு கட்டண தொகை ரூ.50,735/– செலுத்த

வேண்டி வரப்பெற்ற தொகை, ஆக மொத்தம் ரூ.64,820/– கட்டணத்தொகையினை செலுத்த நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு ;–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு. எண். 434/2026/இ1)**

**பொருள் எண்: 04**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.2831/2026/ஆர்–2, நாள்.17.04.2026 உத்தரவில் வடலூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசாணை (நிலை) எண்.173 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.08.12.2022 மற்றும் 11வது CPSMC கூட்ட அறிக்கை நாள்.11.06.2024ல் காணும் அரசாணையின் படி உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி (I&A) 2022–23 திட்டம். 15வது நிதிக்குழு மான்யம் 2022 - 2023, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2024 – 2025 மற்றும் நகராட்சி வருவாய் நிதி 2025 - 2026–ன் கீழ் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் முழுவதுமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, புதிய பேருந்து நிலையத்தில், விழுப்புரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் மூலம் வடலூர் பணிமணைக்கு நேரக்காப்பாளர் அறை மாத வாடகைக்கு ஒப்படைக்கும் பொருட்டு, பொதுப்பணித்துறை விலைவிகிதப்படி இந்நகராட்சி பொறியாளரால் மாத வாடகை நிர்ணயம் செய்து உரிய நகர்மன்ற தீர்மானம் பெறப்பட்டு செங்கல்பட்டு மண்டல செயற்பொறியாளர் அவர்களால் சரிபார்க்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலக பொறியியல் பிரிவால் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாத வாடகை ரூ.3760/– + (GST) தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக நேர காப்பாளர் அறையினை ஏல நடவடிக்கைகள் இன்றி ஒப்படைப்பு செய்திடவும், மேலும், இந்நகராட்சிக்கு இடம் தேவைப்படும் போது எவ்வித நிபந்தனையுமின்றி இடத்தினை காலி செய்து எந்த நிலையில் ஒப்படைக்கப்பட்டதோ அதே நிலையில் நகராட்சிக்கு திரும்பவும் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தணையுடன் ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு. எண்.137/2022/இ1)**

**பொருள் எண்: 05**

வடலூர் நகராட்சி 19.93 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் 27 வார்டுகளை உள்ளடக்கியது. இந்நகராட்சியில், பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி, பணிகளை கண்காணிக்கவும் மற்றும் புதிய திட்டப்பணிகளுக்கு கருத்துரு (DPR) தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டல அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னை மற்றும் TUFIDCO அலுவலகம் சென்னை சென்று உரிய அனுமதி பெருதல், அன்றாடம் கேட்கப்படும் தரவுகள் அனுப்புதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இரண்டாம் நிலை நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணி அமைப்பின்படி இரண்டு பணி ஆய்வர் பணியிடம் மற்றும் குழாய் பொருத்துநர் பணியிடம் சாலையாக உள்ளதால். மேற்படி பணிகளை உரிய காலத்தில் செய்ய சிரமம் ஏற்படுகிறது. எனவே, தொழில்நுட்ப உதவியாளர்கள் வெளிகொணர்வு முகமை மூலம் 6 மாத காலத்திற்கு பணி அமர்த்தும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8.85 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :– மன்றம் அனுமதிக்கலாம்,

**(கோப்பு எண்.364/2026/இ1)**

**பொருள் எண்: 06**

இந்நகராட்சியில் இந்நகராட்சியில் நகர் மன்றத்தலைவர் ஈப்பு வாகன எண் TN 31 CE8496. ஆணையாளர் ஈப்பு வாகன எண் TN 31 CE8476 மற்றும் நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகன எண் TN 31 CE8412 ஆகியவற்றிற்கு நிரந்ததர ஒட்டுநர்கள் எவரும் இல்லாத காரணத்தால் சுய உதவிக்குழு மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதைய அரசின் நெறிமுறைகளின்படி வெளிக்கொணர்வு முகமை பணியாளர்களை கணக்கீடு செய்தும் மேலும், பணியாளர்களுக்கான தினசரி ஊதியத்தினை PWD SOR அல்லது மாவட்ட ஆட்சியர் விலைப்பட்டியல் விகிதத்தில் நிர்ணயித்து வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21787/2021/EA2 நாள்.02.10.2021 சுற்றறிக்கையின்படி நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் M2/509309/2023. நாள்.19.06.2023ல் உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசின் நெறிமுறை மற்றும் அளவுகோலின்படி வெளிகொணர்வு முகமை பணியாளர்களை கொண்டு 6 மாத காலத்திற்கு பணி அமர்த்தும் பணி மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் பணியினை மேற்கொள்ள ஆறு மாதத்திற்கு ஆகும் செலவினம் ரூ.6.42 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக்குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு. எண்.365/2026/இ1**

**பொருள் எண்: 07**

வடலூர் நகராட்சி வார்டு எண்.01 முதல் 27 வார்டுகளில் உள்ள 27 மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் 49 ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மோட்டார்களில் அடிக்கடி ஏற்படும் Fuse, நகராட்சிக்கு சொந்தமான ஜெனரேட்டர்கள் கையாளவும் மற்றும் அலுவலகம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகம் போன்ற இடங்களில் மின் இயக்க பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் மின்னாளர் நிலை II பணி காலியாக இருப்பதாலும், குடிநீர் பணியின் அவசியம் கருதியும் ஒரு மின்னாளர் மற்றும் ஒரு மின் கம்பி உதவியாளர் 6மாத காலத்திற்கு வெளிகொணர்வு முகமை மூலம் அமர்த்தும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.366/2026/இ1.**

**பொருள் எண்: 08**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26, தோமையார் நகர் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது. இக்கிணற்றின் மூலம் அப்பகுதியில் வசிக்கும் 350 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது, ஆழ்துளை கிணறு முற்றிலும் உட்புறம் சரிந்து சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த சூழ்நிலை உள்ளதால், அப்பகுதிக்குட்பட்ட பொது மக்கள் குடிநீர் வசதியில்லாமல் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும், இக்காலம் கோடை காலம் என்பதாலும், பொதுமக்களின் குடிநீரின் அவசியம் கருதி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் - 2026 நன்நடத்தை விதிகள் (Model Code of Conduct – MCC) அமுலில் இருப்பதால், ஒப்பந்தப்புள்ளி கோர வழிவகை இல்லாத காரணத்தினால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)-ன் கீழ், மேற்காணும் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80 இலட்சம் தொகையினை நகராட்சி குடிநீர் நீதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.460/2026/இ1.**

**பொருள் எண்: 09**

வடலூர் நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நெய்வேலி சுரங்கம் II நீரினை ஆதாரமாக கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் - பகுதி-2ன் மூலம் உதவி நிர்வாக பொறியாளர், கிராம குடிநீர் திட்ட உபகோட்டம், கடலூர் அவர்களின் க.எண்.5325/கோ.கி.கு.திட்டம்/உ.நி.பொ/கடலூர்/2024 நாள்.03.03.2025 மற்றும் Exective Engineer,TWAD Board, RWS Division, Cuddalore Lr.No.F.CWSS to Thittakudi/JDO/RWS/Cud/2025 dt.23.07.2025 கடிதம் வாயிலாக குடிநீர் வழங்கப்படுகின்ற அளவு மற்றும் அதற்கான கட்டணதொகை விவரம் இந்நகராட்சிக்கு வழங்கப்படவில்லை என்றும், ஒரு கிலோ லிட்டர் (KL) எவ்வளவு ரூபாய் என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை, என தெரிவித்ததன் காரணமாக, உதவி நிர்வாக பொறியாளர், கிராம குடிநீர் திட்ட உபகோட்டம், கடலூர், க.எண்.கோ.கூ.திட்டம்/உ.நி.பொ/விரு/2025, நாள்.10.11.2025, கடிதத்தை நிர்வாக

பொறியாளர், கிராம குடிநீர் திட்ட கோட்டம் மற்றும் உதவி நிர்வாக பொறியாளர் கிராம குடிநீர் திட்ட உபகோட்டம் ஆகியோரால் 12.11.2025 வழங்கப்பட்ட கடிதத்தின் படி, நிர்ணயக்கப்பட்ட குடிநீர் அளவு ஒன்றுக்கு 2,74,0000 லிட்டர் எனவும், நிலுவை தொகை 88,40,362 எனவும் அக்டோபர் 2025-க்கான தொகை ரூ.1,37,145/- ஆக மொத்தம் ரூ.102,11,812/- உடனடியாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்துமாறு தெரிவித்தனர். இவ்வலுவலக ந.க.எண்.2259/2025/இ1, நாள்.21.01.2026. கடிதத்தின் படி, 19.70 இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்கப்படுகிறது. அதற்கு, மட்டும் உரிய மன்ற ஒப்புதல் பெற்று தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நிர்வாக பொறியாளர், த.கு.வ.வாரியம், கிராம குடிநீர் திட்ட கோட்டம், கடலூர், அவர்களின். க.எண்.கோ. திட்டக்குடி கூ.கு.தி/பகுதி2/இவஅ/கிகுதி/கட/2026, நாள்.10.02.2026.கடிதப்படி 19.70 LL மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் கொள்ளளவிற்கு தொகை செலுத்துமாறு தெரிவித்துள்ளதன் அடிப்படையில், நகர்மன்ற தீர்மான எண்.1050, நாள்.23.02.2026-ன்படி , நவம்பர்/2025 முதல் மே/2026 வரை, 1970 கிலோ லிட்டர், ஒரு நாளைக்கு ரூ.17.64 வீதம் ரூ.73,67,170/- தொகையினை மன்ற ஒப்புதல் பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு. இதுநாள் வரையில் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது, ஜுன் /2026 முதல் மே/2027 வரை கீழ்காணும் 23 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் கொள்ளளவன 28.10 இலட்சம் லிட்டர் வழங்கப்படும் குடிநீருக்கு ஒரு KLக்கு ரூ.17.64 வீதம் ஒரு வருடத்திற்கு 2810x17.64x30x12 = 1,78,44,624/- தொகையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | விஸ்வகர்மா நகர் 0.30 LL OHT | 13. | சந்தை 0.30 LL OHT |
| 2. | சின்ன கோயில் குப்பம் 0.30 LL OHT | 14. | சபை 4.00 LL OHT |
| 3. | ஜெயப்பிரியா 1.00 LL OHT | 15. | அம்மன் கோயில் பார்வதிபுரம் 1.00 LL OHT |
| 4. | காட்டுக்கொல்லை 4.00 LL OHT | 16. | மருவாய் சின்ன காலனி 0.60 LL OHT |
| 5. | சேஷாயிநகர் 1.00 LL OHT | 17. | ஆர்.சி. நடேசனார் நகர் 0.60 LL OHT |
| 6. | மூலக்குப்பம் 0.30 LL OHT | 18. | வெங்கட்டங்குப்பம் 0.60 LL OHT |
| 7. | வானவில் நகர் 0.60 LL OHT | 19. | பொட்டவெளி 0.60 LL OHT |
| 8. | ஜோதி நகர் 0.60 LL OHT | 20. | EB ஆபிஸ் ரோடு 3.00 LL OHT |
| 9. | இந்திரா நகர் 0.60 LL OHT | 21. | பூசாலிக்குப்பம் 1.00 LL OHT |
| 10. | நாகேசன் செட்டியார் நகர் 0.60 LL OHT | 22. | பாட்டை தெரு 2.00 LL OHT |
| 11. | ராஜமாணிக்கம் நகர் 0.30 LL OHT | 23. | ஆர்.கே.மூர்த்தி நகர் 2.00 LL OHT |
| 12. | எம்.கே.கே நகர் 0.30 LL OHT | | |

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2259/2025/இ1.**

**பொருள் எண்: 10**

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில், மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின், ந.க.எண்.487/Mines/2016, நாள்.05.03.2026, செயல்முறை உத்தரவின் படி, இந்நகராட்சியின் VKT பிரதான சாலை மற்றும் கடலூர் - விருத்தாச்சலம் பிரதான சாலைகளில் அலங்கார ஒளி உமிழ்விளக்குகள் அமைக்கும் பணி, மேற்கொள்வதற்கு ரூ.50.00 இலட்சத்திற்கு மாவட்ட கனிம அறக்கட்டளை (**District Mineral Foundation Trust**) – பிரதான் மந்திரி கனிஜ் க்ஷேத்ரா கல்யாண் யோஜனா (**Pradhan Mantri Khanij Kshetra Kalyan Yojana**) – சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் மற்றும் மேம்பாட்டு மானியம் 2025 – 2026 (Welfare and development grant for mining–affected areas and mining–affected people) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், கும்பகோணம் சாலையில் அமைந்துள்ள கருங்குழி சாலையில் இருந்து பண்ருட்டி சாலையில் கண்ணுதோப்பு பாலம் வரையில் உள்ள கீழ்காணும் பகுதிகளுக்கு புதியதாக மின்கம்பம், தெருவிளக்கு மின்பாதை மற்றும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின்கம்பத்தில் புதியதாக தெருவிளக்கு மின்பாதை அமைக்க வேண்டி, இந்நகராட்சியின் கடித ந.க.எண்.434/2026/இ1, நாள்.12.03.2026–ல் இளமின் பொறியாளர், வடலூர் நகரம் மற்றும் உதவிமின் பொறியாளர், வடலூர் கிராமம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்காணும் பணிகளை மேற்கொள்ள, உதவிமின் பொறியாளர், கிராமம் அவர்களின் கடித எண். AE/JE/O&M/ VDL/F.App. Tracking/ D.No.005,006&007/ 2026–27, dated.08.04.2026, வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.9,62,824/– மற்றும் இளமின் பொறியாளர், வடலூர் நகரம் அவர்களின், கடித. எண். AE/JE/ O&M/VDL/ F.App.Tracking/D.No.11/2026, dated. 16.04.2026, வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.15,02,480/– ஆக மொத்த தொகை ரூ.24,65,304/–தொகையினை செலுத்த பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, பொதுநிதியில் போதிய இருப்பு இல்லாததால் மேற்காணும், பணிக்கு உண்டான மதிப்பீட்டு தொகையினை பயன்பாட்டுக் கட்டணத்தில் (Consumption charge) இணைத்து கொள்ளவும், பொதுநிதியில் போதிய நிதி இருப்பு இருப்பின் செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பகுதிகள்** |
|---|---|
| 1. | பண்ருட்டி மெயின் சாலை ( பாபு ரோடோ டெக் முன்புறம்) |
| 2. | பண்ருட்டி மெயின் சாலை ( பூசாலிக்குப்பம் அய்யா பலகை அருகில்) |
| 3. | சிதம்பரம் சாலை (சர்ச் எதிரில்) |
| 4. | சிதம்பரம் சாலை (நடேசன் நகர் பிள்ளையார் கோயில் எதிரில்) |
| 5. | பண்ருட்டி சாலை பெட்ரோல் பங்க் வடபுறம் |
| 6. | பண்ருட்டி சாலை நான்கு முனை சந்திப்பு (மேற்கு) |
| 7. | பண்ருட்டி சாலை ஓடை நாயகி கோயில் எதிர்புறம் |
| 8. | பண்ருட்டி சாலை ஸ்டேட் வங்கி எதிரில் |
| 9. | சிதம்பரம் சாலை செவன்த்டே பள்ளி எதிரில் |
| 10. | பண்ருட்டி சாலை அல்லா கோயில் எதிரில் |
| 11. | பண்ருட்டி சாலை முருகன் கோயில் வடபுறம் |
| 12. | பண்ருட்டி சாலை ஜெயப்பிரியா நகர் |

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.434/2026/இ1.**

**பொருள் எண்: 11**

வடலூர் நகராட்சி வார்டு எண்.10, TS.N0.35, தெற்கு அய்யன் ஏரியினை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2025 - 2026, நிதியின் கீழ் ஏரியினை தூர்வாரி கரைகளை பலப்படுத்தி ஏரியினை சுற்றிலும் நடைபாதை அமைக்கும் பணியில் ஏரியின் மேற்கு பகுதியில் NLC Mins IAவிலிருந்து வெளியேற்றப்படும் மழைநீர் ஏரியின் உட்புகும் பகுதியில் RCC சிறுபாலம் அமைத்தால் தான் பொதுமக்கள் நடைபாதையை முழுமையாக பயன்படுத்த முடியும் என்பதால் அய்யன் ஏரியின் பிரதான கால்வாயின் மேல் கரைகளுக்கு இடையில் மண் பரிசோதனை செய்து சிறுபாலம் அமைக்க உரிய Strctural Design, M/s Span Check association மூலம் தயாரிக்கப்பட்டு அரசு கல்லூரி / பல்கலைக்கழகத்திடம் ஒப்புதல் பெற்றுதர கட்டன்திற்கு பட்டியல் தொகை ரூ.40,000/– க்கு கோரப்பட்ட இத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.367/2026/இ1)**

**பொருள் எண்: 12**

உதவிமின் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், வடலூர் அவர்களின், க.எண். இமிபெ/இ&ப/நகரம்–வடலூர்/கோ.கேட்புதொகை/அ.எண்.199/25–26, நாள்.18.03.2026, உதவி மின் பொறியாளர்/இ&ப/கிராமம்/வடலூர் பிரிவிற்குட்பட்ட வெங்கட்டங்குப்பம் பகிர்மானத்தில் உள்ள வரிசை எண்.1, வெங்கட்டங்குப்பம் நாயுடு தெருவில் உள்ள மின் இணைப்பு எண்.095–004–26, வரிசை எண்.4, இராஜாக்குப்பம் சாலையில் உள்ள மின் இணைப்பு எண்.095–004–323, வரிசை எண்.6, மருவாய் கோயில் அருகில் உள்ள மின் இணைப்பு எண்.095–006–69 மற்றும் வரிசை எண்.12, சிதம்பரம் சாலையின் மேற்கு பகுதியில் உள்ள Unapproved Layout மின் இணைப்பு எண்.095–004–500 ஆகிய நான்கு மின் இணைப்புகளும் பயன்பாட்டில் இல்லாததால், குறைந்தபட்ச தொகை (minimum Charage) மாதமாதம் வருவதால், அதனை துண்டிப்பு செய்யுமாறு இவ்வலுவலக கடித ந.க.எண்.482/2026/இ1, நாள்.07.04.2026ல் உதவிமின் பொறியாளர், கிராமம்/வடலூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து, மேற்காணும், பகுதிகளில் உள்ள மின் இணைப்புகளை நிரந்தர மின்துண்டிப்பு செய்ய, உதவிமின் பொறியாளர், கிராமம்/வடலூர் அவர்களின், க.எண். இமிபெ/ இ&ப/நகரம்–வடலூர்/கோ.கேட்புதொகை/அ.எண்.025/25–26, நாள்.14.05.2026, கடிதத்தில் வரப்பெற்ற பட்டியலில் 095–004–323 மின் இணைப்பு எண்ணிற்கு, ரூ.6,964/– மற்றும் 095–004–500 மின் இணைப்பு எண்ணிற்கு ரூ.31,233/– ஆகாமொத்தம் ரூ.38,233/– தொகையனை செலுத்த நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.482/2026/இ1.**

**பொருள் எண்: 13**

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் அவர்களின் 23.03.2026ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி நடைபெறவுள்ள **''தமிழ்நாடு சட்ட மன்றப் பொது தேர்தல் 2026''** 100% வாக்குப்பதிவு நடைபெற பொதுமக்களுக்கும் மற்றும் மாணவ/மாணவியர்களுக்கும் போதிய அளவில் தேர்தல் விழிப்புணர்வுகளை வடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **தேர்தல் விழிப்புணர்வு நிகழ்வுகள்.** |
|---|---|
| 01 | நகரத்தின் பிரதான சாலைகளில் 100% வாக்குப்பதிவு நடைபெற விழிப்புணர்வு பேரணிகள் நடைபெறுதல் வேண்டும் |
| 02 | பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தேர்தல் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்திட வேண்டும் |
| 03 | தேர்தல் விழிப்புணர்வு கோலப்போட்டிகள் நடத்திட வேண்டும், |
| 04 | பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் மற்றும் பிரதான சாலைகளில் தேர்தல் விழிப்புணர்வு டிஜிட்டல் பேனர்கள் அமைக்க வேண்டும். |
| 05 | தேர்தல் விழிப்புணர்வு ரிட்லி பலூன்கள் 02 எண்ணிக்கையில் அமைக்க வேண்டும் |
| 06 | தேர்தல் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் அச்சடித்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்திட வேண்டும். |
| 07 | தேர்தல் விழிப்புணர்வு குறித்து நிகழ்வுகளை வீடியோ பதிவு செய்து அறிக்கை சமர்பிக்க வேண்டும் |

மேற்காணும் அட்டவணையில் உள்ள தேர்தல் பணிகளை தொய்வின்றி செய்திட மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்தினை தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ள காரணத்தினால் **'' தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திருத்திய சட்டம் 2023'', விதி 57 உட்பிரிவு 7ன்** கீழ் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் 27.03.2026 தேதியில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ரூ.2,41,000/-ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலககுறிப்பு**</u> ;- மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.(1514/2025/எப்1)**

**பொருள் எண்.14.**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 அய்யன் ஏரி. சுடுகாட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடைக்கு Semi Automatic LPG Burner System- த்தினை மின்சாரம் இல்லாத போதும் இயங்குவதற்கு ஏற்ப Manual Automatic LPG Burner System - மாக மாற்றி அமைக்கும் பணிக்கு, தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்தினை வருவாய் நிதி 2025 - 2026

மேற்கொள்ள நாள்.06.03.2026ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்** | **சதவீதம்** |
|---|---|---|
| 1 | M.H.T Engineering,Chennai. | (−)0.02% குறைவு |
| 2 | Yes Yes Engineering, Chennai. | (+)2.66% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−)0.02% குறைவாக கொடுத்துள்ள M.H.T Engineering, Chennai. ஒப்பந்ததாரர், வடலூர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 253/2026/இ1)**

**நகர்மன்ற தலைவர்,**
**வடலூர் நகராட்சி.**

**வடலூர் நகராட்சி**

**மன்றக் கூட்ட அழைப்பிதழ்**

*************

2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 01.06.2026. திங்கள் கிழமை 10.30 மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,

வடலூர் நகராட்சி.